## 28.36 உயர்நிலை குழு அறிக்கை – பள்ளிக் கல்வித் துறை – விளையாட்டுப் பள்ளிகள் / விடுதிகள்/ திடல்கள் / இடங்களை மாவட்ட விளையாட்டு அலுவலருடன் ஆய்வு செய்தல்

---

பள்ளிக்கல்வி (ஒய்.) துறை

அரசாணை (நிலை) எண் 291 நாள் : 7.10.1999

படிக்க :

பள்ளிக்கல்வி (சி) துறை அ,சா.கு.எண் 26591/சி2/99–1 நாள் 28.7.99.

**ஆணை**

கிராம உராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் என்ற மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குதல் குறித்து அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழு விளையாட்டு தொடர்பாக கீழ்கண்ட பரிந்துரைகள் செய்தது.

1. விளையாட்டு பள்ளிகள். விளையாட்டு விடுதிகள் பற்றி மாவட்ட விளையாட்டு அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

2. விளையாட்டுத் திடல்கள், விளையாடும் இடங்கள் பற்றி மாவட்ட விளையாட்டு அலுவலருடன் ஆய்வு செய்யலாம்.

2. மேற்படி உயர்நிலைக்குழுவின் விளையாட்டுகள் தொடர்பான பரிந்துரைகளை அரசு கவனமாக பரிசிலித்து அதனடிப்படையில் கீழ்க்கண்ட அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை மாவட்ட ஊராட்சிக்கு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(1) விளையாட்டுப்பள்ளிகள், விளையாட்டு விடுதிகள் விளையாட்டுத் திடல்கள் மற்றும் விளையாடும் இடங்களை மூன்றடுக்கு ஊராட்சி அமைப்பின் மாவட்ட ஊராட்சி அமைப்பினர் மாவட்ட விளையாட்டு அலுவலருடன் ஆய்வு செய்தல்.

3. மேற்படி ஆணையின் அடிப்படையில் சார்நிலை அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கிடுமாறு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு உறுப்பினர் செயலர் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அரசு செயலாளர்